46. திருக்குறள் தமிழும் தற்காலத் தமிழும்

ந. தட்சணாமூர்த்தி M.A. (தமிழ்),
அஞ்சல் துறை கணக்கு அதிகாரி (ஓய்வு),
பட்டுக்கோட்டை - 614602

முன்னுரை:

திருக்குறள் ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய ஒரு ஒப்பற்ற இலக்கியம். இது சங்ககாலத்தை ஒட்டித்தோன்றியது. சங்க இலக்கியங்கள், தமிழில் ஆழ்ந்த பயிற்சி பெறாதவர்களுக்கு, உரைநூல்களின் துணையின்றிச் சிறிதும் பொருள்விளங்கா. ஆனால் திருக்குறள் 2000 ஆண்டுகள் பழமையானது என்றாலும் எளியமக்களும் புரிந்து கொள்ளும்படி அதில் பல குறள்கள் உள்ளன.

"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும்ஆறாதே
நாவினாற் சுட்ட வடு"

என்றால் யாருக்குத் தான் பொருள் விளங்காது! தற்காலத் தமிழ் நடைபோலவே இது உள்ளது. எனவேதான் தமிழ் கற்றவரிமும் கல்லாதவரிடமும் திருக்குறள் மிகுந்த செல்வாக்கு பெற்று விளங்குகிறது. எனினும் திருக்குறள் காலத்துத் தமிழுக்கும் தற்காலத் தமிழுக்கும் பல வேறுபாடுகள் உள்ளன. மொழி என்பது காலந்தோறும் மாறும் இயல்புஉடையது. எல்லா மொழிகளையும் போலவே தமிழும் காலந்தோறும் பற்பல மாற்றங்களைப் பெற்று வந்துள்ளது. திருக்குறள் சங்க காலத்தில் தோன்றியது எனவும் சங்க காலத்தை அடுத்துத் தோன்றியது எனவும் இருவேறு கருத்துக்கள் அறிஞர் களிடையே உள்ளன. எப்படி இருப்பினும் திருக்குறளில் இடம்பெற்றுள்ள தமிழின் மொழிக்கூறுகள் சங்க காலத்

தமிழின் மொழிக்கூறுகளைப் பெரிதும் ஒத்துள்ளன. சங்க காலத்திற்குப் பின் ஏறத்தாழ 2000 ஆண்டுக்காலத்தில்தமிழ் மொழியில் பற்பல மாற்றங்கள் ஏற்பட்டு விட்டதால் தற்காலத் தமிழுக்கும் சங்க கால தமிழுக்கும் பல வேறுபாடுகள் ஏற்பட்டுவிட்டன. எனவே பல குறள்கள் எளிதில் பொருள் விளங்கினாலும், பல குறள்கள் தமிழில் நன்கு பயிற்சி பெறாத ஆர்வலர்களுக்கு எளிதில்பொருள் விளங்காதவாறும், தவறாகப் பொருள் கொள்ளுமாறும் உள்ளன. திருக்குறள் காலத்துத் தமிழின் மொழிக் கூறுகளை நாம் புரிந்து கொண்டால்தான் குறள்களின் உண்மையான பொருளை நாம் அறிதல் எளிதாகும். மற்ற இலக்கியங்களைப் போல் அல்லாமல் திருக்குறளைப் புலவர் முதல் பொதுமக்கள் வரை, கற்று இன்புறுகின்றனர். அப்படிக் கற்கும் போது பலர் தற்காலத் தமிழைக் கொண்டு பொருள் கண்டு இடர்ப்படுகின்றனர்.

இடர்ப்பாடுகள்:

திருக்குறள் காலத்தில் சில சொற்களுக்கு இருந்த பொருள்கள் தற்காலத்தில் முற்றிலும் மாறிவிட்டன. 'நாற்றம்' என்றசொல் பழங்காலத்தில் பொதுவாக மணத்தையும், குறிப்பாக நறுமணத்தையும் குறித்தது. தற்காலத்தில் துர் நாற்றத்தை மட்டுமே இது குறிக்கிறது. இத்தகைய பொருள் மாறுபாடுகள் ஆழமான தமிழ்ப் பயிற்சி இல்லாமல் ஆர்வத்துடன் திருக்குறளை படிப்பவர்களைக் குழப்புகின்றன.

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று" (குறள் 100)

என்ற குறளின் கருத்து, பொதுவாக, அனைவருக்கும் தெரியும். ஆனால் இதன் தெளிந்த பொருளைக் காண்பதில் இடர்ப்பாடு உள்ளது. 'இனிய சொற்கள்' என்றால் புரிந்துகொள்ளலாம் 'இனிய உளவாக' என்பது எப்படிப் பொருந்தும்? 'இன்னாத சொற்கள்' என்றால் சரி. 'இன்னாத கூறல்' என்பது எப்படிப் பொருந்தும்? இத்தகைய ஐயங்கள் பலருக்கும் வரும். 2000 ஆண்டுகளில் தமிழ் இலக்கண அமைப்புகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றைப் புரிந்துகொண்டால் இத்தகைய ஐயங்கள் வாரா. புலவர் நிலையில் உள்ளவர்

களுக்கு இவை எளிமையானவை தான். ஆனால் மற்றவர் களுக்கு இவைபற்றிய விளக்கம் தேவை. குறிப்பாக தமிழ்ப் பயிற்சி குன்றியுள்ள இக்காலத்தில், இத்தகைய மாறுபாடு களைப் பற்றித் தெளிவாக அறிதல் திருக்குறளின் தெளிவான பொருளை அறிய மிகவும்உதவும். இக் கட்டுரையில் திருக்குறளில் காணப்படும் சில சொற்பொருள் மாற்றங்களும் எளிமையான சில இலக்கண மாறுபாடுகளும் விவரிக்கப்படுகின்றன.

சொற்பொருள் மாற்றங்கள்:

குழப்பம் தரும் நன்றி:

> "தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
> முந்தி இருப்பச் செயல்" (குறள் 67)

என்ற குறளில் தந்தை மகனுக்கு செய்யும் நன்றி பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. தற்காலத்தில் 'நன்றி' என்பது பிறர் செய்த நன்மையைப் பாராட்டிக் கைம்மாறு கருதும் உணர்வைக் குறிக்கிறது. எனவே பலரும் இக்குறளைப் பற்றி குழம்புவது உண்டு. மகன்தானே தந்தையிடம் நன்றி காட்ட வேண்டும்; தந்தை ஏன் மகனிடம் நன்றி காட்ட வேண்டும் என்பதன் விளக்கம் இச்சொல்லின் பொருள் 2000 வருடங்களில் மாற்றம் பெற்றுவிட்டதுஎன்பதே. அக்காலத்தில் 'நன்றி' என்ற சொல் 'நன்மை' என்ற பொருளையே குறித்தது. 'நன்றியில் செல்வம்' என்றால் 'நன்மை இல்லாத (தராத) செல்வம்' என்று பொருள் (அதி. 101). 'நன்றி பயக்கும் '(குறள். 97), 'நன்றி பயவா வினை'(குறள் 652), 'காலத்தினால் செய்த நன்றி' (குறள் 102) என்ற இடங்களிலும் 'நன்றி' என்ற சொல்லுக்கு 'நன்மை' என்பதுவே பொருள் எனவே இங்கு, 'தந்தை மகனுக்கு ஆற்றும் நன்மை' என்று பொருள் படுவதை அறிந்தால் குழப்பம் வராது.

எவன்:

தற்காலத்தில் 'எவன்' என்பது 'யார்' என்ற பொருளில் வருகிறது. அக்காலத்தில் 'எவன்' என்பது 'என்ன', 'ஏன்' என்ற பொருள்களில் பயன்பட்டது.

'சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும்'(குறள் 57), (சிறைகாக்கும் காப்பு என்னசெய்யும்?)

'இகழ்வாரை நோவது எவன்' (குறள் 237), (இகழ்வாரை நோவது ஏன்?)

'அல்லல் படுவது எவன்'(குறள் 379), (அல்லல்படுவது என்ன?)

'மற்றும் தொடர்பாடு எவன்'(குறள் 345) (மற்றும் தொடர்ப்பாடு ஏன்?)

என்ற இடங்களில் 'எவன்' என்ற சொல் 'என்ன', 'ஏன்' என்ற பொருள்களில் வந்துள்ளது.

ஆள்தலும், ஆண்மையும், ஆட்சியும்:

'ஆள்' என்ற வினைச்சொல்லை அடியாகக் கொண்டு பிறந்த சொற்களே 'ஆள்தல்', 'ஆண்மை','ஆட்சி' ஆகியன. தற்காலத்தில் 'ஆள்தல்' என்றால் அரசு ஆளுதலைக் குறிக்கும்.' ஆண்மை' என்றால் ஆண் தன்மையைக் குறிக்கும்.'ஆட்சி' என்பது அரசாட்சியைக் குறிக்கும். 'ஆள்தல்' என்பது பழந்தமிழில் 'பெற்றிருத்தல்' என்று பொருள்படும். 'ஆண்மை', 'ஆட்சி' இரண்டும் பெற்றிருக்கும் தன்மையை குறிக்கும். திருக்குறளில் பல இடங்களில் இவ்வாறு வந்துள்ளதைக் காணலாம்.

'அருள் ஆள்க' (குறள் 242) என்றால் 'அருளைக் கொண்டிருங்கள்' என்று பொருள். 'அருள் ஆள்வார்க்கு', (குறள் 244, 245), 'நாண் ஆள்பவர்' (குறள் 1017) என்ற இடங்களும் இவ்வாறானவை.

'புல்லறிவாண்மை'(குறள் 331, அதி 85) என்றால் புல்ய அறிவினை கொண்டிருத்தல் என்று பொருள். மாறாக, 'ஆண்மை' என்ற சொல் தற்காலத்துப் பொருளிலும் 'கடைக் கொட்கச் செய்தக்கது ஆண்மை'(குறள் 663) என்ற குறளில் வந்துள்ளது.

"பொருள்ஆட்சி போற்றாதார்க்கு இல்லை அருள்ஆட்சி ஆங்கில்லை ஊன்தின்ப வர்க்கு" (குறள் 252)

என்ற குறளில் 'ஆட்சி' என்ற சொல் 'கொண்டிருத்தல்' என்ற பொருளில் வருகிறது.

பயம்:

'பயம்' என்ற சொல் பழங்காலத்தில் 'பயன்' என்ற சொல்லின் பொருளில் பயன்பட்டது. 'ஐயுணர்வு எய்தியக்கண்ணும் பயமின்றே' (குறள் 354) என்ற குறளில் 'பயமின்றே' என்பதற்கு 'பயனின்றே' என்பதுவே பொருள்.

அசைவும் அசைவின்மையும்:

தற்காலத்தில் 'அசைவு இல்லாதவன்' என்றால் அசையாமல் அப்படியே உள்ளவனைக் குறிக்கும். ஆனால் திருக்குறளில் இச்சொல் சோர்வு இல்லாமல் செயல்படுவதைக் குறிக்கிறது.'அசைதல்' என்றால் பழந்தமிழில் சோர்ந்து இளைப்பாறுதல் என்றுபொருள்.'அசைவின்மை' என்பது 'சோர்வு இல்லாமை' ஆகும்.'ஆகுஊழல் தோன்றும் அசைவு இன்மை'(குறள் 371), 'அசைவுஇலா ஊக்கம் உடையான் உழை' (குறள் 594) என்ற இடங்களில் இப்பொருளைக் காணலாம்.

அகற்றுதல்:

இக்காலத்தில் 'அறிவு அகற்றும்' என்றால் 'அறிவை நீக்கும்' என்று பொருள். திருக்குறளில், 'விரிவடையச் செய்தல்' என்றபொருளில் 'அகற்றுதல்' என்றசொல் பயன்பட்டு உள்ளது. 'அறிவுஅகற்றும்ஆகல்ஊழ்' (குறள் 372) என்னும் பொழுது 'நல்ல ஊழ்அறிவைப் பெருக்கும்' என்று பொருள் தருகின்றது.

தூங்கலும், தூங்காமையும்:

இக்காலத்தில் 'தூங்குதல்' என்றால் உறங்குதலைக் குறிக்கும். திருக்குறளில் இச்சொல் காலம் தாழ்த்துதலைக் குறிக்கிறது. 'தூங்காமை கல்வி துணிவுடைமை' (குறள் 383)

என்ற குறளிலும், "தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க தூங்காது செய்யும் வினை" (குறள் 672)என்ற குறளிலும் இப்பொருளைக் காணலாம்.

கண்ணோட்டம்:

'ஒரு கண்ணோட்டம் விட்டான்' என்றால் தற்காலத்தில் 'கண்ணால் ஒரு பார்வை பார்த்தான்' என்று பொருள். திருக்குறளில் கண்ணோட்டம் என்பது இரக்கம், கருணை என்று பொருள்படும் (அதி 58).

படை:

'படை' என்ற சொல் வீரர்களின் தொகுதியையே இக் காலத்தில் சுட்டும். பழங்காலத்தில் 'படை' என்பது படைக் கருவி, படைக்கலன் என்ற பொருளில் வாள், வேல் போன்ற ஏதாவது ஒரு கருவியையும் குறிக்கும். 'தொழுதகை யுள்ளும் படை ஒடுங்கும்' (குறள் 828), 'நம் பெண்மை உடைக்கும் படை' (குறள் 1258) என்ற குறள்களில் வரும் படை காலாட் படை போன்றது அல்ல; ஒரு படைக் கருவிதான்.

வீரர்களின் தொகுதியைப் 'படை' எனக்கூறும் தற்காலப் பொருளிலும், 'படை' என்ற சொல் திருக்குறளில் பயன் பட்டுள்ளது. 'படை குடிகூழ் அமைச்சுநட்பு அரண் ஆறும்' (குறள் 381) என்ற குறளிலும் படைமாட்சி (அதி 77), படைச்செருக்கு (அதி 78) என்ற அதிகாரப் பெயர்களிலும் இப்பொருளைக் காணலாம்.

இறத்தல்:

'இறத்தல்' என்றசொல் தற்காலத்தில் 'சாதல்' என்ற பொருள் தருகிறது; அமங்கலச் சொல்லாகவும் கருதப்படுகிறது. பழங்காலத்தில் இச்சொல்லின் பொருள் 'கடந்து செல்லுதல்' என்பது தான். பின்புதான் 'சாதல்' என்ற பொருள் உருவானது. எனவே இச்சொல் பழைய இலக்கியங்களில் வெகு இயல்பாய்ப் பயன்பட்டு உள்ளது. அகநானூற்றுப்பாடல் 1 ல்வரும் 'காடு இறந்தோர்'1 என்பதன் பொருள் 'காட்டில் இறந்தவர்' என்று பலர் கருதக்கூடும். ஆனால் அதன் பொருள்

'காட்டைக் கடந்தவர்' என்பதே. 'இறந்தார் இறந்தார் அனையர்' (குறள் 310) என்ற குறளில் முதற்சொல் 'கடந்தவர்' என்ற பொருளிலும் அடுத்த சொல் 'செத்தார்' என்ற பொருளிலும் வருகின்றன. 'அஃது இறந்து ஊக்கின்'(குறள் 476) என்ற இடத்திலும் 'இறத்தல்' என்பதற்குக் 'கடத்தல்' என்னும் பொருளைக் காணலாம்.

சில எளிய இலக்கண மாறுபாடுகள்:

'அ' என்ற பலவின் பால் ஈறு:

'வந்தனஅ, 'கரியனஅ, 'குறுங்காலன' என்ற சொற்களின் ஈற்றில் 'அ' என்ற விகுதி உள்ளது. இது அஃறிணைப் பன்மையைக் குறிக்கும் ஒரு விகுதி. இது பெயர்ச்சொல், வினைச்சொல் இரண்டுக்கும்வரும் (ஆறுமுக நாவலர் (1984) சூ. 280 பக். 192 மற். சூ. 329 பக். 244). பழந்தமிழில் இதன் பயன்பாடு மிகுதி. தற்காலப் பயன்பாட்டில் கரியன, பெரியன போன்ற 'அ' விகுதிச்சொற்களை விட கரியவை, பெரியவை போன்ற 'வை' விகுதிச்சொற்களை மிகுதியாகக் காணலாம். திருக்குறளில் இத்தகைய அகரஈற்றுச் சொற்கள் இடம் பெற்றுள்ள விதம் குறித்துக் கீழே காண்போம்.

இனிய, இன்னாத:

சொற்களை உச்சரிக்கும்போது உச்சரிப்பில் இனிமை, எளிமை ஏற்படுத்துவதற்காக சில ஒ◌களை நடுவில் சேர்த்துக் கொள்வது தமிழில் தொன்றுதொட்டு உண்டு. இவற்றைச் 'சாரியை' என்பர். 'அன்', 'இன்' போன்றவை சாரியைகள். 'கையன்' என்றும் கூறலாம். 'இன்' என்ற சாரியை சேர்த்து 'கையினன்' என்றும் கூறலாம். 'இனியன' என்ற சொல்லில் 'இனி + அன் + அ' என்று அன்சாரியை இடையில் வந்துள்ளது. மேலே கூறப்பட்ட அஃறிணைப் பன்மையைக் குறிக்கும் அகர ஈற்று சொற்கள் தற்காலத்தில் 'இனியன' என்பது போல 'அன்' சாரியை பெற்றே பயன்படுகின்றன. இவ்வாறு சாரியை சேர்க்காமல் பழந்தமிழில் பல அஃறிணைப்பன் மையைக் குறிக்கும் சொற்கள் பயன்படுத்தப்பட்டன. 'இனியன' என்ற சொல் 'அன்' சாரியை பெறாவிட்டால் 'இனிய' என்று இருக்கும். இதன்படி 'பழங்கள் இனியன' என்று கூறுவதைப்

'பழங்கள் இனிய' என்றும் கூறலாம். ஆனால் தற்காலத்தில் 'இனிய' என்ற சொல்லைப் பெயரடையாகப் பயன்படுத்தி 'இனிய பழங்கள்' என்று கூறுகிறோமே தவிர. வினைச் சொல்லாகப் பயன்படுத்தி (குறிப்பு வினைமுற்று), 'பழங்கள் இனிய' என்று கூறுவதில்லை; 'அன்' சாரியைசேர்த்து 'பழங்கள் இனியன' என்றுதான் கூறுவோம். ஆனால் திருக் குறளிலும் சங்க இலக்கியங்களிலும் இவ்வாறு 'அன்' சாரியை பெறாத அகரஈற்று பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் மிகுதியாகக் காணலாம்.

'செயற்கு அரிய செய்வார்பெரியர்' (குறள் 26) (செயற்கு அரியன செய்வார் பெரியர்)

'இனிய உளவாக இன்னாத கூறல்'(குறள் 100) (இனியன உளவாக இன்னாதன கூறல்)

'தீய வழுக்கியும் வாயால் சொலல்' (குறள் 139) (தீயன வழுக்கியும் வாயால் சொலல்)

'அகர முதல எழுத்தெல்லாம்' (குறள் 1) (அகரம் முதலன எழுத்தெல்லாம்)

'மற்றெல்லாம் புறத்த' (குறள் 39) (மற்றெல்லாம் புறத்தன)

அத்து என்ற சாரியை பெறாதவை:

சாரியைகளுள் 'அத்து' என்பதும் ஒன்று. நிலத்துக்கு (நிலம் + அத்து + கு), நலத்துக்கு (நலம் + அத்து + கு), வையத்துக்கு (வையம் + அத்து + கு) என்ற சொற்கள் அத்துச் சாரியை கொண்டவை. பழந்தமிழில் இந்த அத்துச்சாரியை இல்லாமல் சொற்களைக் கூறுவது உண்டு. திருக்குறளில் இவ்வாறான சில இடங்களைக் கீழே காணலாம்:

'நலக்குரியார் யாரெனின்' (குறள் 149) (நலத்துக்கு உரியார் யாரெனின்)

'நிலக்குப்பொறை'(குறள் 570) (நிலத்துக்குப் பொறை)

'வையக்குஅணி' (குறள் 701) (வையத்துக்கு அணி)

என்ப, கூறுப:

'கூறுவர்' என்ற சொல்லின் இறுதியில் 'அர்' என்ற விகுதி உள்ளது.'கூறுவார்' என்பதில்'ஆர்' விகுதி உள்ளது. இவை பலர் பாலைக் குறிக்கின்றன. 'அர்', 'ஆர்' போல 'ப' என்ற விகுதியும் பழந்தமிழில் பலர்பாலைக் குறிக்கும் விகுதியாகும் (ஆறுமுக நாவலர் (1984) சூ. 327 பக். 242) 'கூறுப' என்றால் 'கூறுவர்' என்று பொருள்.'என்ப' என்றால் 'என்பார்கள்' என்று பொருள். 'மங்கலம் என்ப மனைமாட்சி' (குறள் 60), 'தம் பொருள் என்ப தம் மக்கள்' (குறள் 63) என்ற இடங்களில் 'மங்கலம் என்பது மனைமாட்சி' 'தம் பொருள் என்பது தம் மக்கள்' என்று சிலர்கருதக்கூடும். இத்தொடர்களின் பொருள், 'மங்கலம் என்பார்கள் மனைமாட்சியை', 'தம் பொருள் என்பார்கள் தம் மக்களை' என்பதே.

'என்ப' என்ற சொல் 'என்பார்கள்' என்ற பொருளில் அல்லாமல் 'என்பன' என்ற பொருளிலும் 'அறுவினை என்ப உளவோ' (குறள் 483) என்ற குறளில் பயன்பட்டு உள்ளது.

அல் விகுதி:

'வாழ்க', 'செய்க' என்ற சொற்களின் இறுதியில் 'க' என்ற விகுதி உள்ளது இது வியங்கோள் விகுதி எனப்படும். 'அல்' என்பதும் இத்தகைய வியங்கோள் விகுதியாகப் பயன்பட்டது. இவ்வாறு 'அல்' என்பது வியங்கோள் விகுதியாக வரும்போது 'செயல்' என்றசொல் 'செய்க' என்ற பொருளைத் தரும்? (ஆறுமுக நாவலர் (1984) சூ.338 பக்.249) 'அல்' விகுதி வியங்கோள் விகுதியாக மட்டுமின்றி தொழிற்பெயர் விகுதியாகவும் வரும். 'அவன் செயல் நன்று' என்பது போன்ற இடங்களில் செய்தலைக் குறிப்பிடும் பெயராக 'செயல்' என்ற சொல் உள்ளது. தற்காலத்தில் இவ்வாறு தொழிற்பெயராக மட்டுமே வருமே தவிர முதலில் கூறியதுபோல 'செய்க' என்ற வியங்கோள் பொருளில் வருவதில்லை. ஆனால் திருக் குறளில் 'அல்' என்பது தொழிற்பெயர் விகுதியாக மட்டுமின்றி, பல இடங்களில் வியங்கோள் விகுதியாகவும் வருகிறது.

'செல்லும்வாய் எல்லாம் செயல்' (குறள் 33), (செல்லும் வாய் எல்லாம் செய்க)

'தகுதியான் வென்று விடல்' (குறள் 158) (தகுதியால் வென்று விடுக)

'துணைவலியும் தூக்கிச் செயல்' (குறள் 471) (துணை வலியும் தூக்கிச் செய்க)

'அவன்கண் விடல்'(குறள் 517) (அவன்கண் விடுக)

வேற்றுமை உருபுகள்:

'மலரைப் பறித்தான்', 'வாளால் வெட்டினான்', 'அவனுக்குக் கொடுத்தான்', 'குமரனது வேல்' என்னும் தொடர்களில் ஐ, ஆல், கு, அது ஆகியவை வேற்றுமை உருபு களாக உள்ளன. வேற்றுமைகள் எட்டு. முதல் வேற்றுமையான எழுவாய் வேற்றுமைக்கும் எட்டாம்வேற்று மையான விளி வேற்றுமைக்கும் உருபுகள்இல்லை. மற்ற ஆறு வேற்றுமை களுக்கும் உருபுகள் உள்ளன. பழங்காலத்தில் வேற்றுமை உருபுகள் பயன்பட்ட விதத்திற்கும் தற்காலத்தில் அவை பயன்படும் விதத்திற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன.

ஆன் உருபு:

பழங்காலத்தில் 'ஆன்' என்று இருந்த உருபு, பிற்காலத்தில் 'ஆல்' என்று மாறிவிட்டது. எனவே தற்காலத்தில் 'முருகனால்' என்று கூறப்படுவது பழந்தமிழில் 'முருகனான்' என்று கூறப்படும். திருக்குறளில் பல இடங்களில் 'ஆன்' உருபைக் காணலாம்.

'உரன்என்னும் தோட்டியான்' (குறள் 24) (உரன் என்னும் தோட்டியால்)

'செந்தண்மை பூண்டுஒழுகலான்' (குறள் 30) (செந்தண்மை பூண்டு ஒழுகலால்)

'அறத்தான் வருவதே இன்பம்' (குறள் 39)(அறத்தால் வருவதே இன்பம்)

'புறந்தூய்மை நீரான் அமையும்' (குறள் 298) (புறந் தூய்மை நீரால் அமையும்)

திருக்குறளில் 'ஆல்' உருபு:

ஒரு இலக்கணக் கூறின் வடிவம் காலப்போக்கில் வேறு ஒன்றாக மாறும்போது, பழையது, புதியது இரண்டுமே ஒரு காலக்கட்டத்தில் மக்களின் பயன்பாட்டில் இருக்கும். ஏறத்தாழ 10ஆம் நூற்றாண்டை ஒட்டிய காலத்தைய உரையாசிரியர்கள் தங்கள் உரைகளில் பெரும்பாலும் 'ஆன்' உருபையே பயன்படுத்தி உள்ளனர். ஆனால் அவர்கள் பழைமையைப் போற்றும் மரபின்படியே அவ்வாறு செய் துள்ளனர் என்பதை அறியமுடிகிறது. அவர்கள் காலத்துக்கு 1000 ஆண்டுகள் முன்பு திருக்குறள் காலத்திலேயே 'ஆல்' உருபுமக்களின் பயன்பாட்டில் வந்துவிட்டது என்பதை அறிய முடிகிறது. தற்காலத்தில் குறள்களின் சீர்களைச் சொற்பிரித்து வெளியிடப்பட்டுள்ள திருக்குறள் நூல்களில் பல இடங்களில் 'ஆல்' உருபைக்காணலாம். ஆனால் இவை மூலச் செய்யுளில் 'ஆன்' உருபாஅல்லது 'ஆல்' உருபா என்பது ஆராய்ச்சிக்கு உரியது. 'ஆன்', 'ஆல்' இரண்டிலும் உள்ள னகரமும் லகரமும் செய்யுள் புணர்ச்சியில் றகரமாக மாறும் (காலத்தினான் + செய்த = காலத்தினாற் செய்த; காலத்தினால் + செய்த = காலத்தினாற் செய்த). எனினும் கீழ்காணும் இடங்கள் திருக்குறளில் 'ஆல்' உருபு இடம் பெற்றிருப்பதை உறுதியாகக் காட்டும். ஏனென்றால் சொற்பிரிக்கப்படாத மூலச் செய்யுளில் இந்த இடங்கள் 'ஆல்' உருபைக் கொண்டுள்ளன.

'கற்றதனாலாய பயன்' (குறள் 2) (கற்றதனால் ஆய பயன்)

'கனவினாலாகிய ஆக்கம்' (குறள் 283) (கனவினால் ஆகிய ஆக்கம்)

எனவே திருக்குறள் காலத்திலேயே 'ஆல்' உருபு இலக்கியங்களில் வரத் தொடங்கிவிட்டதை அறிகிறோம்.

இன் உருபு:

'இன்' என்ற ஐந்தாம் வேற்றுமை உருபு பழந்தமிழில், 'நீங்கல்', 'ஒப்பு', 'எல்லை', 'ஏது' என்னும் பொருள்களில் வரும் (ஆறுமுக நாவலர் (1984) சூ. 299 பக். 216).

பழந்தமிழில் 'இன்' உருபு ஒப்புப் பொருளில் வரும் பொழுது, 'காக்கையின் கரியது நாவல்பழம்' என்றால் 'காக்கை போல் கரியது நாவல் பழம்' என்று பொருள். இதை 'உவம ஒப்பு' என்பர். 'மலையினும் பெரிது' என்று வரும் போது 'மலையை விடப் பெரியது' என்று பொருள். இதை 'உறழ்வு ஒப்பு' என்பர். 'உம்' என்ற இடைச்சொல் (சிறப்பும்மை) சேராமலும் இத்தகைய உறழ்வு ஒப்புப் பொருளை 'இன்' உருபு தருவது உண்டு. திருக்குறளில் இவ்வாறான இடங்களைக் கீழே காணலாம்.

'துறந்தாரின் தூய்மை உடையர்' (குறள் 159) (துறந்தார் போலத் தூய்மை உடையர்)

'இமையாரின் வாழினும்' (குறள் 906) (இமையார் போல வாழினும்)

'ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும்' (குறள் 69) (ஈன்ற பொழுதை விடப் பெரிது உவக்கும்)

'ஈதலின்நன்றே' (குறள் 92) (ஈதலைவிட நன்றே)

'பொய்த்து உயிர் வாழ்தலின்' (குறள் 183) (பொய்த்து உயிர் வாழ்தலை விட)

'வறுமையின் இன்னாதே' (குறள் 408) (வறுமையை விட இன்னாதே)

இத்தகைய பயன்பாடு தற்காலத்தில் இல்லை. 'உம்' சேர்த்து உறழ்வு ஒப்புப் பொருளில் கூறுவது மட்டும்தற்கா லத்திலும் சிறிது உண்டு.

'இன்' உருபு நீங்கல் பொருளில் பயன்படும்போது பழந்தமிழில் 'தஞ்சையின் நீங்கினான்' என்றால் 'தஞ்சையில் இருந்து நீங்கினான்' என்று பொருள்படும். 'மழையின் வீழ் அருவி' என்றால் 'மலையினுடைய வீழும் அருவி' என்று பொருள் அல்ல. 'மழையில் இருந்து விழும் அருவி' என்பதே பொருள். 'இழிதல்' என்பதற்குப் பழந்தமிழில் 'விழுதல்' என்ற பொருளுண்டு. இவற்றின்படி,'தலையின் இழிந்த மயிரனையர்' (குறள் 964) என்ற தொடரின் பொருள் 'தலையினது இழிவான

மயிர்' என்பது அல்ல; 'தலையிலிருந்து விழுந்த மயிர்' என்பதே இதன்பொருள். தற்காலத்தில் 'இன்' உருபுக்குப் பதிலாக 'இல் இருந்து' என்பது நீங்கல் பொருளைக் குறிக்கப் பயன்படுகிறது.

'இன்' என்பது பழந்தமிழில் ஏதுப்பொருளிலும் வரும். 'அம்பின் கொன்றான்' என்றால் 'அம்பினால் கொன்றான்' என்று பொருள். கீழ்காணும் குறள்களில் இத்தகைய பொருளைக் காணலாம்:

'ஒழுக்கத்தின் எய்துவர்மேன்மை' (குறள் 137) (ஒழுக்கத்தால் எய்துவர் மேன்மை)

'அழுக்காற்றின் அல்லவைசெய்யார்' (குறள் 164) (அழுக்காற்றால் அல்லவை செய்யார்)

'கொலையின் கொடியாரை வேந்து ஒருத்தல்' (குறள் 550) (கொலையால் கொடியாரை வேந்து ஒருத்தல்) தற்காலத்தில் இத்தகைய பயன்பாடும் இல்லை.

இன்சாரியை:

'இன்' என்பது 'இராமனின் வீடு' 'முகிலனின் நூல்' போன்றவற்றில் ஆறாம் வேற்றுமை உருபுபோல தற்காலத்தில் பயன்படுகிறது. ஆனால் இது வேற்றுமை உருபா என்பது ஆராய்ச்சிக்கு உரியது. உண்மையில் 'இன்' என்பது ஆறாம் வேற்றுமை உருபாகப் பயன்படுவது அல்ல என்றே தெரிகிறது. அவ்வாறு எந்த இலக்கண நூலிலும் கூறப்படவில்லை. 'இன்' என்பது ஐந்தாம் வேற்றுமை உருபாக மட்டுமின்றி சாரியை களுள் ஒன்றாகவும் உள்ளது. 'குரங்கதுகுட்டி' (குரங்குடைய குட்டி) என்பது ஒலியினிமைக்காக 'இன்' என்ற சாரியை பெற்று 'குரங்கினது குட்டி' என ஆகும் (ஆறுமுக நாவலர் (1921) வசனம் 219 பக்.118). வேற்றுமை உருபுகள் வெளிப் படையாக வராமல் மறைந்து நின்றால் அது 'வேற்றுமைத் தொகை' எனப்படும். 'அது' என்ற ஆறாம் வேற்றுமை உருபு மறைந்துநின்று ஆறாம் வேற்றுமைத் தொகையாக வரும் போது, அந்தச் சொல் 'இன்' என்ற சாரியை பெற்றிருந்தால் அந்த 'இன்' மட்டும் மறையாமல் நிற்கும். 'குரங்கினது குட்டி'

என்பது இவ்வாறு வரும்போது 'குரங்கின் குட்டி' எனவரும். தற்காலத்தில் இவ்வாறு 'இன்' என்ற சாரியை மட்டும் நின்று 'அது' என்ற வேற்றுமை உருபு மறைந்துவரும் அமைப்பிலேயே 'இராமனின் வீடு', 'முகிலனின் நூல்' போன்ற தொடர்களை நாம் பயன்படுத்துகிறோம். பழந்தமிழில் இத்தகைய பயன்பாடு மிகவும் குறைவு எனலாம்.

கள்வேம், எழுதேம்:

'திருடுவோம்', 'எழுதுவோம்' என்ற சொற்களின் இறுதியில் 'ஓம்' என்ற விகுதி வந்துள்ளது. இது தன்மைப் பன்மை வினைச்சொல் விகுதியாகும். 'ஓம்' என்பது போல 'எம்', 'ஏம்' என்பவையும் தன்மைப் பன்மை வினைச்சொல் விகுதிகளாகும். (ஆறுமுக நாவலர் (1984) சூ. 332 பக். 192) 'கள்வெம்', 'கள்வேம்' என்பவை 'கள்வோம்' என்பதன் பழைய வடிவங்கள்.

'கள்ளத்தால் கள்வேம் எனல்' (குறள் 282) (கள்ளத்தால் கள்வோம் எனல்)

'கண்ணும் எழுதேம்' (குறள் 1127) (கண்ணும் எழுதோம்)

என்ற தொடர்களில் 'ஏம்' விகுதி வந்துள்ளது.

அசைநிலைகள்:

பழந்தமிழில் பல இடங்களில் 'அசைநிலைகள்' என்ற சொற்கள் பயன்படும். இவை பொருளற்ற வெற்றுச்சொற்கள் என்பர். எனினும் இவை குறிப்பால் சிலவற்றை உணர்த்தவும் செய்யும். மன்ற, ஓரும், ஆல். போன்றவை அசைநிலைகள். (ஆறுமுக நாவலர் (1921) வசனம் 315 பக். 178 மற்.வசனம் 334 பக். 184).

'விளிந்தாரின் வேறல்லர் மன்ற' (குறள் 143) (விளிந்தாரின் வேறல்லர்)

'அஞ்சுவது ஓரும் அறனே' (குறள் 366) (அஞ்சுவது அறனே)

'யாதானும் நாடாமால் ஊராமால்' (குறள் 397) (யாதானும் நாடாம் ஊராம்)

'புகழ்இன்றால் புத்தேள் நாட்டு உய்யாதால்' (குறள் 966) (புகழ் இன்று புத்தேள் நாட்டு உய்யாது) என்ற குறள்களில் மன்ற, ஓரும், ஆல் ஆகியவை அசைநிலைகள். இவை தற்காலத்தில் வழக்கத்தில் இல்லை. தற்காலத்தில் சிலர் 'வந்து' என்ற சொல்லைத் தேவையின்றி இடையிடையே பயன்படுத்துவர். இது தற்காலத்து அசைநிலை எனலாம்.

பால்பகா அஃறிணைப் பெயர்:

மக்களைக் குறிக்கும் பெயர்கள் உயர்திணைப் பெயர்கள் ஆகும். மக்கள் தவிர்ந்த விலங்குகள், பொருள்களைக் குறிக்கும் பெயர்கள் அஃறிணைப் பெயர்கள் ஆகும். அஃறிணையில் ஒருமையைக் குறிக்கும்விகுதி 'து'. (அது, உரியது); பன்மையைக் குறிக்கும் விகுதிகள் 'கள்', 'வை', 'அ' ஆகியன. (மாடுகள், அவை, கொடியன) முயல், மரம் போன்ற அஃறிணைப் பெயர்களில் ஒருமை விகுதியோ, பன்மை விகுதியோ இல்லை. பழந்தமிழில் இவை ஒருமை, பன்மை இரண்டையும் குறிக்கும். 'பால்பகா அஃறிணைப் பெயர்கள்ஓ என இவை கூறப்படும் (ஆறுமுக நாவலர் (1984) சூ. 281 பக். 193) 'மரம் வீழ்ந்தது' எனும் போது 'மரம்' என்பது ஒருமை. 'மரம் வீழ்ந்தன' என்றால் 'மரங்கள் வீழ்ந்தன' என்று பொருள். இங்கு 'மரம்' என்பது பன்மை. இது போலவே 'முயல் ஓடியது' என்பதில் 'முயல்' என்பது ஒருமை. 'முயல் ஓடின' என்றால் 'முயல்கள் ஓடின' என்று பொருள். இங்கு 'முயல்' என்பது பன்மை. இவ்வாறு பால்பகா அஃறிணைப் பெயர்கள் பன்மைப் பொருளில் வருவதைத் திருக்குறளில் பல இடங்களில் காணலாம்.

'இடும்பை இல' (குறள் 4) (இடும்பைகள் இல)

'பனுவல் துணிபு' (குறள் 22) (பனுவல்கள் துணிபு)

'நிலத்து மறைமொழி' (குறள் 27) (நிலத்துமறை மொழிகள்)

செய்யும் என்ற வாய்பாட்டு வினைமுற்று:

'நடக்கும்', 'பெய்யும்' போன்றவை 'செய்யும் என்ற வாய்பாட்டு வினைமுற்று' கள் ஆகும். தற்காலத்தில் இவை

படர்க்கை அஃறிணைப் பாலில் மட்டுமே பயன்படுகின்றன. அதாவது குதிரைவரும், குதிரைகள் வரும், மழை பெய்யும், சட்டைகள் கிழியும் என்று மட்டுமே கூறுகிறோம்; கந்தன் பாடும், மாதவி ஆடும் என்றெல்லாம் உயர் திணையில் எழுத்து வழக்கில் கூறுவதில்லை. ஆனால் பழந்தமிழ் இலக்கணப்படி இவை படர்க்கை உயர்திணை ஒருமையிலும், படர்க்கை அஃறிணை ஒருமை, பன்மையிலும் வரும். அதாவது அவன், அவள், அது, அவை என்பவற்றுக்கு வரும். (தன்மை, முன்னிலையிலும் படரக்கை உயர்திணைப் பன்மையிலும் வராது. அதாவதுநான், நீ, அவர் என்பவற்றுக்கு வராது) (ஆறுமுக நாவலர் (1984) சூ. 348 பக்.259). பழந்தமிழ் இலக்கணப் படிதிருக்குறளில் பல இடங்களில் படர்க்கை உயர்திணை ஒருமையில் இந்தச் 'செய்யும் என்ற வாய் பாட்டு வினைமுற்று' வந்துள்ளது. சில எடுத்துக்காட்டுகளைக் கீழே காணலாம்:

'செய்யாள் உறையும்' (குறள் 84) (செய்யாள்உறைவாள்)

'எளிதென இல்லிறப்பான் எய்தும்' (குறள் 145) (எளிதென இல்லிறப்பான் எய்துவான்)

'செருக்கறுப்பான் வானோர்க்கு உயர்ந்த உலகம்புகும்' (குறள் 346) (செருக்கறுப்பான் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகுவான்)

தற்காலத்தில், 'அண்ணன்வரும்', 'அப்பாவரும்', 'அக்காவரும்', 'அம்மாவரும்' என்றெல்லாம்பேச்சுவழக்கில் கூறுதல் பழைய பயன்பாட்டின் எச்சமெனத் தோன்றுகிறது.

வினையாலனையும் பெயரும் வினைமுற்றும்:

பழந்தமிழில் சில வினைச்சொற்களும் வினையாலணையும் பெயர்களும் ஒரேவடிவில் இருப்பது உண்டு. எடுத்துக்காட்டாக 'அங்கு ஏகினான்' எனும்போது 'ஏகினான்' என்பது வினைச்சொல். 'மலர்மிசை ஏகினான் மாணடி' எனும்போது ஏகினான் என்பது வினையாலணையும் பெயர். தற்காலத்தில் 'ஏகியவன்' என்ற வடிவத்தில் வினையாலணையும் பெயரைக் கூறுகிறோமே ஒழிய, 'ஏகினான்' என்ற

வடிவத்தில் வினையாலணையும் பெயரைக் கூறுவதில்லை. ஆனால் திருக்குறளில் இவ்வாறுபயன்படுதலைப்பல இடங்களில் காணலாம். சில எடுத்துக்காட்டுகள் பின் வருமாறு:

'ஓரைந்தும் காப்பான்' (குறள் 24) (ஓரைந்தும் காப்பவன்)

'வருவிருந்து பார்த்திருப்பான்'(குறள் 86) (வருவிருந்து பார்த்திருப்பவன்)

'தீமை புரிந்து ஒழுகுவார்' (குறள் 143) (தீமை புரிந்து ஒழுகுபவர்)

முடிவுரை:

தற்காலத்தில் திருக்குறளுக்குப் பல உரைகள் வந்துள்ளன; வந்துகொண்டே உள்ளன. ஆனால் அவை பெரும்பாலும் தெளிவுரைகளாகவே உள்ளன. நேரடியாகக் குறளின் பொருளை நுட்பமாக அறிந்துகொள்ள அவை பெரிதும் துணை புரிவதில்லை. மேலே கூறப்பட்ட சொற்பொருள் மாறுபாடுகள் மற்றும் இலக்கண மாறுபாடுகளைத் தெரிந்து கொண்டால் திருக்குறளின் தெளிபொருளைச் சரியாகத் தெரிந்துகொள்ள மிகவும் உதவியாகும்; குறள்களை நேராகக் கற்றுணர்ந்து குறள்களின் அழகையும், சிறப்பையும், பெருமையையும் உணர வழிஏற்படும்.

மேற்கோள்கள்:

1. திருவள்ளுவர், திருக்குறள்.

2. ஆறுமுகநாவலர் (1984), நன்னூல் காண்டிகை உரை, தமிழ்ப் பல்கலைக்கழகம் (நிழற்படப்பதிப்பு), தஞ்சாவூர்.

3. ஆறுமுகநாவலர் (1921), இலக்கணச் சுருக்கம், வித்தியாநு பாலனயந்திர சாலை (13 ஆம் பதிப்பு), சென்னை.